சந்திரா பிக்சர்ஸ்
ஜெனோவா
தமிழ்
டைரக்ஷன்:
F. நாகூர்.

நடிகர்கள்

எம். ஜி. ராமச்சந்தர்	—	சிப்ரஸோ
பி. எஸ். வீரப்பா	—	கோலோ
எம். ஜி. சக்ரபாணி	—	அன்றூஸ்
ஆர். பாலசுப்ரமண்யம்	—	பிரபந்த தேசத்து அரசர்
டி, எஸ். துரைராஜ்	—	நல்லதம்பி ஆரோக்யம்
எம். ஆர். சாமிநாதன்	—	விஸ்வாசம்
டி. வி. சேதுராமன்	—	சந்தோஷம்
ஸி. வள்ளிநாயகம்	—	பிரபந்த தேசத்து மந்திரி

ஸ்டண்ட் சோமு அண்டு பார்ட்டி

பி. எஸ். ஸரோஜா	—	ஜெனேவா
ஜூனியர் கண்ணும்பா	—	ரோசி
ராஜாமணி	—	பாக்கியம்

கதை : ஸ்வாமி ப்ரம்மவரதன்

வசனம் : சுரதா, இளங்கோவன், நெடுமாறன்.

பாடல்கள் : சுரதா, ரமணி

சங்கீதம் : விஸ்வநாதம், ஞானமணி, கல்யாணம்.

பிண்ணணி சங்கீதம் : பி. லீலா, ஏ. பி. கோமளா, ஏ. எம். ராஜா

ஒளிப்பதிவு மேற்பார்வை: ஜிதன் பானர்ஜி

ஒளிப்பதிவு : ஜி. விட்டல் ராவ்

ஒலிப்பதிவு மேற்பார்வை: டின்ஷா கே. தெஹ்ராணி

ஒலிப்பதிவு : கருணகரன்

ஆடை அலங்காரம் : எம். நடேசன்

மேக்கப் : தனகோடி

எடிடிங் : என். பி. நடராஜ முதலியார்

அசோ. டைரக்‌ஷன்: கே. பி. ரங்கநாதன்

ஆர்ட் & டைரக்‌ஷன் : **எப். நாகூர்**

ஸ்டுடியோ : நியூடோன்

தயாரிப்பு : **சந்திரா பிக்சர்ஸ்; ஆலப்புழை.**

" ஜெனேவா "

கதைச்சுருக்கம்

பிரபந்த தேசத்து இளவரசி ஜெனேவா தன் தோழிகளுடன் கோச்சு வண்டியில் உல்லாசமாகப் பாடிக்கொண்டு போகிறுள். அச்சமயம் குதிரைகள் கட்டுக்கடங்காமல் போய்விடவே, அவர் களுக்கு பின் வந்துக்கொண்டிருந்த ஆர்தீன தேசத்து அரசன் சிப்ரஸோ குதிரைகளை நிறுத்தி இளவரசியையும், அவளது தோழி களையும் காப்பாற்றுகிறுன். தன் நன்றிக்கு அறிகுறியாக இளவரசி ஒரு மாலையை பரிசளிக்க, அரசன் தன்னை இன்னரென்று தெரிவிக் காமல் தனக்கு பரிசு வேண்டாமெனச் சொல்லுகிறுன். இளவரசி மறுபடியும் அவனை நிர்பந்திக்க :சிப்ரஸோ அப்பரிசை வாங்கிக் கொண்டு தன் மந்திரி கோலோவுடனும், தன் பரிவாரங்களுடனும் கலந்து கொள்ளுகிறுன்.

ஆர்தீன தேசத்து மந்திரி கோலோ, அரசர் பிரபானந்தரை அவரது அரண்மனையில் சந்தித்து, சிப்ரோஸோ மகாராஜா நாளை வருவதாகத் தெரிவிக்கிறுன். அங்கிருந்து புதுமாளிகைக்கு செல்லும் வழியில் இளவரசி ஜெனேவாவை கோலோ சந்தித்து அவள்பேரில் காதல் கொள்கிறுன். மறுநாள் அரசர் சிப்ரஸோவிற்கும், இளவரசி ஜெனேவாவிற்கும் திருமணம் நடக்கிறது. அதன்பின் அவர்கள் பரிவாரங்கள் புடைசூழ ஆர்தீனதேசத்தை அடைகின்றனர். தளபதி அன்னஸ் அரசனையும், அரசியையும் வரவேற்கிறுன்

சிப்ரஸோவும், ஜெனேவாவும் சதுரங்கம் விளையாடும் சமயத் தில் அரண்மனைச் சேவகன் கிராதூஸின் உயர்ந்த குணத்தைப்

பற்றி பேசுகின்றனர். மூர்நாட்டு மன்னன் ஆர்தீன தேசத்து மக்களுக்குத் துன்பங் கொடுப்பதை நிறுத்த சிப்ரஸோ, தன் மனைவி ஜெனோவாவை மந்திரி கோலோ, தளபதி அன்னுஸ், அரண்மனைச் சேவகன் கிராதூஸ் முதலியோரின் கவனிப்பில் விட்டு போருக்குச் செல்கிறான். தான் கருவுற்றிருப்பதைத் தன் கணவனிடம் சொல்ல வில்லையே என ஜெனோவா வருத்தப்படுகிறாள்.

மன்னன் போரிலீடுபட்டிருக்கும் சமயம் ஜெனோவாவையடைய கோலோ முயல்கிறான். தன் எண்ணம் பலிக்காததால் அரண்மனைச் சேவகன் கிராதூஸுடன் ராணி கள்ள நட்புக்கொண்டதாக ஒரு பொய்க் குற்றத்தைச் சாட்டி கிராதூஸையும், ஜெனோவாவையும் சிறையிலடைக்கிறான்.

பகைவர்களை ஜெயித்து வெற்றியுடன் தன் நகர் திரும்பிவரும் சிப்ரஸோ மகாராஜாவை மந்திரி கோலோவும், தளபதி அன்னுஸும் வரவேற்கின்றனர். சிறையிலிருக்கும் ராணியும், கிராதூஸும் இனிமேல் தங்கள் துன்பங்கள் தீருமென்று எண்ணுகின்றனர்.

ஜெனோவாவை காணாத அரசன் கோலாவிடம் "அரசி எங்கே" என்று கேட்கிறான். அதற்கு கோலோ, அரசி—கிராதூஸ் கள்ள நட்பையும், அதனால் ராணிக்கு குழந்தை பிறந்திருக்கிறதென்றும்— அதற்கடையாளமாக அரசியின் முத்திரை மோதிரத்தையும் காண்பிக்கிறான். இது உண்மையாக இருக்குமா என்ற மனக்குழப்பத்துடன் அரசன் சிறைக்குச்செல்ல, அங்கே ஜெனோவாவையும், அவள் குழந்தையையும் பார்க்கிறான். ஜெனோவா ஆசையுடன் அரசனை அணுகுகிறாள். வெறுப்பும் கோபமும் கொண்ட அரசன் ஜெனோவாவைத்தள்ளி கிராதூஸுக்கு மரண தண்டனையையும், ஜெனோவாவையும் குழந்தையையும் துஷ்ட மிருகங்கள் சஞ்சரிக்கும் காட்டில் விட்டுவர தன் சிப்பாய்களுக்கு உத்திரவிடுகிறான்.

மழையிலும், வெயிலிலும் அவதிப்பட்டு, அன்ன ஆகாரமின்றி தன் குழந்தையுடன் கஷ்ட்டப்படும் ஜெனோவாவிற்குத் தேவமாதாவின் அருள் கிடைத்து ஒரு குகையில் வாழ்கிறாள். கோலோவும், அன்னுஸும் சதி செய்து, களங்கமற்ற அரசனை கைது செய்து. ஒரு சபையை கூட்டி, அரசனுக்கு பைத்தியம் என்று ஜனங்களை நம்ப வைத்து, அரசனை காவலில் வைக்கின்றனர். இச்சங்கதியையறிந்த ரோஸி, சூழ்ச்சியால் அரசனை தப்புவிக்கிறாள்.

அரசன் சிறையிலிருந்து தப்பிய செய்தியை ஞானம் மூலம் அறிந்த அன்னுஸ், கோலோவை பார்க்கப் புறப்படுகிறான். ரோஸி அதைத் தடுத்து, அரசனுக்குத் துரோகம் செய்யக்கூடாதெனச் சொல்ல, வாக்குவாதம் வலுக்கிறது. கோபமடைந்த அன்னுஸ், ரோஸியை கொன்றுவிடுகிறான். அரண்மனையில் கோலோவுக்கும், அரசனுக்கும் கத்திச் சண்டை நடக்கிறது. அன்னுஸ் அரசனைக் கொல்லவரும் சமயம், ஆரோக்கியம் அன்னுஸைக் கொன்று விடுகிறான். சண்டையில் காயமுற்ற கோலோ தப்பி ஓடுகிறான்.

அரண்மனையில் அரசன் மன நிம்மதியில்லாமல் அரண்மனையை விட்டுப்போய்விடுகிறான். காட்டில் ஒரு அருவியினருகில் கோலோவுக்கும், சிப்ரஸோவுக்கும் சண்டை நடக்கிறது. அதில் சிப்ரஸோ கோலோவைக் கொன்றுவிடுகிறான். மிக்க களைப்புடன் கரையை அடைந்த அரசனை ஒரு சிறுவன் அழைத்துச்செல்கிறான். ஜெனோவா தன் மகனை காணாது தேடிவரும் சமயத்தில் சிப்ரஸோவும், ஜெனோவாவும் ஒருவரையொருவர் சந்திக்கின்றனர்.

" பிரிந்தவர் கூடினால் பேசவும் இயலுமோ "

முற்றிற்று.

" ஜெனோவா "

பாட்டுகள்

1.

கோரஸ்: லல்லலலல்லா லல்லலலல்லா லல்லலலல்லா
லல்லா லலலா லலா
புதுமலர் வனந்தனைப் பாராய்—வெகு ஜோராய்
இளந்தென்றல் உலாவுது நேராய்
ஆஹஹஹா கலாப மயில் பாராய் (புது)

ஜெ: ஹஹ்ஹஹ்ஹஹ்ஹா ஆ ஓஹோஹ்ஹோ
மாலையில் வேளையில் பொன் போல் ஒளிர்
மா மலையழகினைக் காண்போம்
பாழையின் கமுகே—சோலையின் அமுதே
பரவசமிதுவேயாகும்—ஓஹோ உல்லாசமிதுவே யாகும்
ஆஹா உல்லாசமிதுவேதான்

கோரஸ்: புது மலர் வனந்தனைப் பாராய்—வெகு ஜோராய்
இளந்தென்றல் உலாவுது பாராய்
ஆஹஹஹ்ஹா கலாப மயில் பாராய் (புது)

நம் ராணியின் முகமே தாமரை தானே
நிஜந்தானே
புது ஆனந்தம் தருமே வஸந்தகாலமே, வஸந்தகாலமே
கலைமான் ஓடுதே
மயில் தாளுடுதே—மயில் தாளுடுதே

ஜெ: தேவபிதாவின் திருவருளாலே........ஏ........ஏ
ஜீவன் யாவுமே உருவாவியதே
எல்லாம் படைத்த தெய்வந்தனையே
வாழ்த்தியே வணங்குவோம் நாமே (லல்லல)

2. ஜெனோவா

புதிதான குதூகலம் தானே
நினைவினில் வந்தே-கொஞ்சி
கொஞ்சி விளையாடல் ஏனோ
புதுமையே மலருதே..........ல........ல

இன்னேரம் மறைந்தே ஏனோ இருந்தாய்
போடி என்னையே ஏமாற்றத்தானே
எல்லாரும் சேர்ந்தே நீரோடை போவோம்
அன்னம் போவது போலே
அன்னம் போவது போலே

ஜோதி நிலாவில் ஜோராகத் தானே
ஆனந்தமே அடைவோம் நாம்
தேன் மலர் தேடி ரீங்காரம் செய்தே
பாடும் வண்டதைப் பாராய்-சுவை
மயிலென நடனம்
ஆடியே பாடியே ஜோடியாய் சோலையே நாடுவோம்

உல்லாசமுடனே ஒன்றுகச் சேர்ந்து
ஓடுவோமே மான் கூட்டம் போலே
தண்ணீரில் நீந்தி போவோமே நாமே
ஓடம் போவது போலே
ஓடம் போவது போலே (புதிதான)

3. சிப்ரஸோ—ஜெனோவா

சி: கண்ணுக்குள் மின்னல் காட்டும் தெய்வ-
காதல் ஜோதியா
சிலைபோல மௌனம் நீயே-
செய்வதேனோ மானே
ஜோடியாக பாடுவோமே வாசரோஜா வா வா-
கண்ணுக்குள் மின்னல் காட்டும் தெய்வ காதல் ஜோதியே

ஜெ: நிலாவில் நாம் உலாவிடும் வேளையில்
கரை தாவும் அலைபோல் எனை கொஞ்சவே வந்த
தூதரே கண்ணாடியால் ஓவியம் தனையே மறைத்தால்
தெரியாதோ

ஜெ: நானறிவேனே உங்கள் ஜாலம்
போதும் போதுமோ

சி: தித்திக்கும் இன்பமே வேண்டி வந்தேனே
தாமதமேனோ தங்க பதுமை எனை நீயே
தவிக்கவிடுவது தகுமோ
பொன் வண்டு பூவை தேடி வந்தால் கேள்வி கேட்பதோ

சி: மானின் பார்வை பேசுதே

ஜெ: இதழில் ஒளியை வீசுதே

சி: வன்னப்பூவின் ரூபமே

ஜெ: வானசந்திர தீபமே

சி: நாதமே

ஜெ: கீதமே

சி.ஜெ. : காதலில் காணும் போதை தானே வானபோகமே
காதலில் காணும் போதை தானே வானபோகமே

4. ஜெனோவா & சிப்ரஸோ

ஜெ: நாமே ஜீவசுகம் உல்லாசம் தேடும் நேரமே

சி: போற்றிடு கவி போலவே புதுமை தரும் காதல் லோகமே
ஆ................ஆ............ஆ.................

ஜெ: சி:. நாமே ஜீவ சுகம் உல்லாசம் தேடும் நேரமே

ஜெ: நாம் வாழ்ந்திடும் நிலமே வளமே வான் உலகம் ஆகுமே
மாலை நிழல் போலே வளரும் ஆசை மனதில் மோதுதே

சி. ஜெ.: ஆனந்தந்தானே வாழ்வின் லாபம் ராணி
வாலிபக் காலமே தேன் ஆகுமே

ஜெ: நீர்தான் குளிராம் நிலவா வாசம் வீசும் தென்றலா

சி: கண்ணே வெண்ணிலா
மா மலையைத் தேடி ஓடும் மேகம் பாராய் அதோ
எந்நாளுமே

ஜெ: நீங்காத ப்ரேமையானல்

சி: எல்லோரும் ஊமையே

ஜெ. சி.: நாமிருவர் காணும் இன்பந்தானே லோக சாரமே
ஓ ………….லோக சாரமே (நாமே)

5. சிப்ரஸோ & ஜெனோவா

சி. ஆசையே அலைமோதுதே கசப்பாகுதே மனமே தினமே

ஜெ: தேடியே மனம் ஓடுதே அன்பே என் ஆருயிரே

சி: அன்பான நீயும் அருகே இல்லாதே
சுகமே தராதே நிழல்கூட தீ போல் சுடுதே விடாதே
கருணையில்லாதே

ஜெ: அன்பே என் ஆருயிரே
தேடியே மனம் ஓடுதே அன்பே என் ஆருயிரே

சி: இளமைப் புருவே எனையே நிலாவே
எதிராளி போலே வாட்டுதே

ஜெ: பிரிவாலே நானே அமைதியில்லேனே
தனியான போது புது வாழ்வு ஏது?
கடல் நீலம் போலே இருளே இந்நாளே
கவலையதாலே–கசப்பாகுதே மனமே (தே)

சி: ஆசையே அலைமோதுதே கசப்பாகுதே மனமே தினமே

6. ஜெனோவா

துணை நீயே தேவத் தாயே
அகில லோக ஜோதி நீயே
கன்னிமரியே தாயே நீயே

பழியை எண்ணி வழியும் கண்ணீர்
பாதம் சேர்ந்தும் சோதனை யேன்
கனவிலும் நான் களங்கமரியேன்
பெருந் தீ மீதிலே ஈ மொய்ப்பதுண்டோ

சதிகாரன் இவனையே நம்பியே
மதி மோசம் போனேனே வாழ்விலே
பெரும் கூண்டில் கிளியைப் போல் ஆனேனே
நீலவான் மீதிலே நிழல் படிவதுண்டோ தேவமாதா

7.

ஜெனோவா

காதல் வாழ்வில் கனியான கதிரே
கண்ணான கண்ணே கருமாமணியே

ஆசையெல்லாம் வீணானதே
இகவாழ்விலின்பம் போனதே
இனிதான முகங்காண ஆகா தென்றுலோ
பாபம் ஆகும் பாரில் தாயே........

சிங்காரப் பூவில் சொந்தமிலாதால்
தனியாக நாமே விதியாலே தானே
நங்கூரமே யிலாததனால்
தடுமாறி ஆடும் தோணியைப் போல்
வேதனைத் தீர நீ துணையாம்
அனாதி
என்னாதி
சுஜோதி
கண்ணானக் கண்ணே கருமாமணியே.......

8.

டான்ஸ் பாட்டு

பம் பம் பம் பம் சிலம்பம்
பம் பம் பம் பம் சிலம்பம்
பம் பம் பம் பம் சிலம்பம்

பம் பம் பம்
பம் பம் பம் பம் சிலம்பம்
பம் பம்பம பம் சிலம்பம்

எண்ணுமலே கண்ணே என்று சும்மா சொல்லாதே-போதும்
பின்னால் வராதே
எண்ணுமலே கண்ணே என்று சும்மா சொல்லாதே-போதும்
பின்னால் வராதே

பலகாலம் பாத்து வச்சும் பயனில்லே
அப்படியா

உன் நினைவாலே மனசு ஒண்ணும் சரியல்லே
பலகாலம் பாத்து வச்சும் பயனில்லே
உன் நினைவாலே மனசு ஒண்ணும் சரியில்லே

ஆசையினாலே யோசனையிலாது
ஆசையினாலே யோசனையிலாது

அன்பாய் என் மேல் மனம் வச்சால் அது பொல்லாது
எண்ணுமலே கண்ணே என்று சும்மா சொல்லாதே
போதும் பின்னால் வராதே

பம் பம் பம் பம் சிலம்பம்
பம் பம் பம் பம் சிலம்பம் பம் பம் பம்
பம் பம் பம் பம் சிலம்பம்

9. ஜெனோவா

பரிதாபமில்லையா பரலோகமாதா
பரதேசியானேம் பாரிலே
முறையாகுமா-இனியேது செய்வோம்
பரலோகமாதா பரதேசியானேம்
பரிதாபமே இல்லையோ

பாட்டு

பரிதாபமில்லையோ பரலோகமாதா
பரதேசியானோம் பாரிலே
முறையாகுமா—இனியேது செய்வோம்
பரலோகமாதா— பரதேசியானோம்
பரிதாபமே இல்லையா—பரலோகமாதாவே
இருளே சூழலாமோ வாழ்வில்
ஒளியே தாருந்தாயே
ஞான ஒளியே தாருந்தாயே
ஏன் பிறந்தோம் வசைக் காளானோமே
மரியே மனமே தாளோம்
முறையாகுமோ இனி ஏது செய்வோம்
பரலோகமாதா பரதேசியானோம்
பரிதாபமே இல்லையா—பரலோகமாதாவே

10.

ஜெனோவா

தாயே—ஜீவ ஜோதியே
ஜெகமதில்—எம் பாக்யமே

பாட்டு

பாத சேவை பாபம் நீங்கும்
பாரிலெங்கும் ஞான தீபம்
பேதமில்லா நின் தயவாலே
சேதமில்லை ஏழை வாழ்வே....

(பாத சேவை)

11. ஜெஞ்ஞேவா

ஆனந்தம் ஆனந்தம் காணேனே ஆதியே....ஏ
ஆதாரம் நின் பாதம் மாஜோதியே....ஏ (ஆன)
வானேடும் கார்மேகம் பார்மீதிலே ஒளிவீசுதே
இந்தப் பார்மீதில் உந்தன் சேவையே காணுதே....ஆனந்தம்

12. சிப்ரஸோ

செய்த பாபத்தினுலே நான் படும் வேதனை போதாதோ
வெய்யிலிலே புழு போல ஆக முறையோ பரம பிதாவே

பாட்டு

அனுதையைப் போலவே ஆனேனே
எனது மனமே அலை அசைவைப் போலவே ஆடுதே
சுக வாழ்வு இனி வீண் தானே
வீண் சுமை ஆனேனே........ (அனுதை)

தேயும் நிலா போல் ஆனேன்
புகையான தீபம் ஆனேன்
ஓயாத சோகத்தாலே மிக வாடியே நான் நொந்தேன்
வீண் சுமை ஆனேனே.... (அனுதை)

சுவை தரும் தேன் அமுதை
விஷ மென்றே நான் நினைந்தேன்
ஆராய்ந்திடாமல் நானே
முழு மூடனுகினேனே........ (அனுதை)

முற்றிற்று.

பிரபாத் பிரஸ், வேலூர், போன் 92

விரைவில் வருகிறது
நாகூர் சி
புரொடக்ஷன்
NAGOOR CINE
NCP
PRODUCTIONS
சந்தேகி
தமிழ்
டைரக்ஷன்:
F. நாகூர்.
Neelan.Vel